எம்.சி.ஓ.பி எண்: 4218/2025 தேதி: 09.07.2026

மசா. : 1

பெயர் : பிரியங்காதேவி

த /பெ. : கௌசல் குமார்

வயது : 31

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை ஹிந்தியில் விளக்கப்பட்டு புரிந்து கொண்டு கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 25 வரை தாக்கல் செய்கிறேன். மசாஆ 5 ஆவணம் மட்டும் எதிர்தரப்பு ஆட்சிபேனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்து குறித்து காவல் நிலையத்தில் புகார் நான் கொடுக்கவில்லை. நாங்கள் சென்னையில் குடியிருக்கிறோம் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நான் இழப்பீடு கேட்டு இந்த நீதிமன்றத்தில் கோரமுடியாது என்றாலும் இந்த மனு 2ம் எதிர்மனுதாரர் பொறுத்து தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. எனக்கும், கௌசல்குமாருக்கும் திருமணம் நடந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மனுதாரர்கள் 2,3,4 ஆகியோர் கௌசல்குமாரின் மகன்,மகள்கள் என்பதற்கு ஆதாரம் பிறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. எங்கள் குடும்ப அட்டை உள்ளது. அதை நீதிமன்றத்திற்கு கொண்டுவரவில்லை. மசாஆ 5 ஆவணம் வழக்கிற்காக தயாரித்து தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் இந்த ஆவணம் வாரிசு சான்றிதழ் இல்லை என்றாலும் சரியல்ல. மனுதாரர்கள் 5,6 கௌசல்குமாரின் பெற்றோர்கள் என்று காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் மசாஆ 5 தாக்கல் செய்துள்ளேன். அதில் உறவு முறை குறிப்பிடப்பட்டுள்ளது. மசாஆ 5 ஆவணத்தை வைத்து நாங்கள் தான் வாரிசுகள் என்று சொல்லமுடியாது என்றாலும் மனுதாரர்கள் கௌசல்குமாரின் வாரிசுகள் இல்லை என்றால் சரியல்ல. கௌசல்குமாரின் வயது, தொழில், வருமானம் குறித்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்துள்ளேன். முதல் தகவல் அறிக்கையில் விபத்து ஏற்படுத்திய காரின் ஓட்டுநர் பெயர்

ராஜசேகர் என்றும் குற்றப்பத்திரிக்கையில் சந்திரசேகர் என்று உள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. காரை யார் ஓட்டினார்கள் என்று தெரியாததால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சாியல்ல.

X

சாட்சிக்கு ஹிந்தி மொழி மட்டுமே தெரியும் என்பதால் கேட்கப்படும் கேள்விகள் சாட்சிக்கு ஹிந்தி மொழியில் வழக்கறிஞர் திரு. ஜுவானந்தம் Enrl. No: 3014 /2008 என்பவரால் விளக்கப்பட்டு மொழிப்பெயர்க்கப்பட்டு சாட்சியின் சாட்சியம் நீதிமன்றத்தில் எடுத்துரைத்து பதிவு செய்யப்படுவதை இரு தரப்பு வழக்கறிஞரோடு ஒப்புக்கொண்ட நிலையில் சாட்சியின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

X

மொழிப்பெயர்பாளர் கையொப்பம்

**மறுவிசாரணை இல்லை**

x

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு ஹிந்தியில் விளக்கி வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.